என்ன வந்தாலும் நம்பிடுவேன்
என்ன நேர்ந்தாலும் பற்றிக்கொள்வேனே
யார் கைவிட்டாலும் பின் செல்லுவேன் - உம்மை
.
Enna vanthaalum Nambiduvaen
Enna nernthaalum Patri kolvaene
Yaar kaivitaalum pinn seluvaen  - Ummai

நீரே நீரெ நீரே போதுமே
இயேசுவே நீரே போதும் இயேசுவே
.
Neerae neerae neerae pothumae
Yesuvae neerae pothum yesuvae

துன்பத்தின் நடுவில் நடந்தாலும்
கண்ணீரின் மத்தியில் கடந்தாலும்
மரண இருளின் பள்ளதாக்கில்
என்னோடு இருப்பவரே
.
Thunbathin naduvil nadanthaalum
Kaneerin mathiyil kadanthaalum
Marana irulin palla thaakil
Ennodu irupavare

வியாதியின் மத்தியில் மரித்தாலும்
பாடுகள் என்னை நெருக்கினாலும்
திகையாதே கலங்காதே என்று சொன்னீரே
என்னையும் நடத்திடுமே
.
Viyaathiyin mathiyil marithaalum
Paadugal ennai nerukkinaalum
Thigaiyaathae kalangaathae endru sonnerae
Ennaiyum nadathidumae

சோதனை என்னை சூழ்ந்தாலும்
வேதனை என்னை நெருக்கினாலும்
சோர்ந்திடாதே என்று தைரியப்படுத்தி
என்னோடு நடப்பவரே
.
Sothanai ennai soozhnthaalum
Vethanai ennai Nerukkinaalum
Sornthidaathae endru thairiyapaduthi
Ennodu nadapavare

நேசித்தோர் என்னை விட்டு விலகினாலும்
நம்பினோர் என்னை கை விட்டாலும்
முடிவு பரியந்தம் என்னோடு இருப்பேன்
என்று சொன்னவரே
.
Nesithor ennai vittu vilaginaalum
Nambinor ennai kai vitaalum
Mudivu pariyantham ennodu irupaen
Endru sonnavare